IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.
DEPOSITION OF WITNESS

(As per XXIII case of Criminal procedure)

SESSIONS CASE NO.33/2015

Deposition of witness for prosecution : PW6

Defense :

Name : அமுதா

Husband's Name : வெங்கடேசன்

Village : முள்ளண்டிரம்

Taluk : ஆரணி

Caste :

Calling : கூலித்தொழில்

Religion :

Age : 45

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 21.08.2025.

**குறுக்கு விசாரணை**

**2ம் எதிரி ஆஜர். 1 மற்றும் 3 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 எதிரிக்கு மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

1. ஆஜர் எதிரியை பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்து இருக்கிறேன். வழக்கு சம்பவம் எந்த தேதியில் நடந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் 23.03.2014 அன்று இரவு நடந்தது. சூரியன் என்ற சின்னத்தை யார் எதனால் அழித்தார்கள் என்றால் மணி என்பவர் சாணியால் அழித்தார். மணிகண்டனை யார் யார் தாக்கினார்கள் என்றால் நிரோஷ் மற்றும் தனசேகர் தாக்கினார்கள். சம்பவத்தை நேரில் பார்த்தேன். மற்றொரு சம்பவம் ஆஸ்பிட்டலில் நடந்தது அதையும் நேரில் பார்த்தேன். கத்தியால் குத்தியதை நேரில் பார்த்தேன். நானும் எதிரிகளும் வேறு வேறு கட்சியை சார்ந்தவர்கள் என்றாலும் கட்சி வேறுபாடு காரணமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.